Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, COURT, ANNUR
Case No.C.C.No. 410 /2023

Deposition of witness for Prosecution P.W.4 Date : 09.02.2024

| | |
|---|---|
| Name : சுரேஷ் | Father's Name : குமாரசாமி |
| Village : | Taluk : |
| Caste : | Calling : |
| Religion : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9th day of February 2024 **(Accused Present)**

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை.

நான் தற்போது குரும்பபாளையத்தில் குடியிருந்து சென்டிரிங் தொடர்பான கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். இவ்வழக்கில் காவல் துறை விசாரணையின்போது நான் கையொப்பம் செய்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் கண்டுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான், (அந்த கையொப்பம் அ.சா.ஆ.**1** ஆக குறியீடு செய்யப்படுகிறது). மேற்படி கையொப்பத்தை நான் 5,6 ஆண்டுகளுக்கு முன்பு கோவில்பாளையம் காவல் நிலையத்தில் வைத்து செய்தேன். சண்முகம் வீட்டில் குடியிருந்த பெண்ணிற்கும் சண்முகத்திற்கும் இடையே வீட்டு வாடகை பற்றிய பிரச்சனை தொடர்பாக கையொப்பம் செய்தேன்.

சாட்சி பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசுதரப்பில் அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது. அனுமதியின் அடிப்படையில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

பார்வை மகசரில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவ இடம் தேதி, நேரத்தில் வைத்து காவல்துறையினா் சம்பவ இடத்திற்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு சம்பவ இடத்தில் வைத்து வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார்செய்ததற்கு சம்பவ இடத்தில் வைத்து சாட்சியாக நான் கையொப்பம் செய்துவிட்டு இப்பொழுது காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

இவ்வழக்கு தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.